# பால்வளத் துறை

## மானியக் கோரிக்கை எண். 8

# அறிவிப்புகள்
# 2012–2013

**V. மூர்த்தி**

பால் மற்றும் பால்பண்ணை மேம்பாட்டுத்துறை அமைச்சர்

# 1. கிராம அளவில் பால் உற்பத்திக்கான மகளிர் குழுக்கள் அமைத்தல்

**மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி,** பால் உற்பத்தியை பெருக்குவதற்காகவும், கிராமப்புறங்களில் பால் உற்பத்தி கட்டமைப்புகளை உருவாக்கிடவும் நடப்பு ஆண்டில் 1,500 மகளிர் குழுக்கள் மற்றும் பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கங்கள் தொடங்கப்படும்.

## 2. வங்கி நிதி உதவியுடன் 10,000 கறவை மாடுகள் கொள்முதல் செய்தல்

**மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின்** தொலைநோக்குத் திட்டமான இரண்டாவது வெண்மைப் புரட்சியை தமிழகத்தில் உருவாக்கிடும் வகையில் ஏற்கெனவே விலையில்லா கறவை மாடுகள் வழங்கும் திட்டம் வெற்றிகரமாக நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. இந்த நோக்கத்தினை மேலும் வலுப்படுத்துவதற்காக பால்வளத்துறை மூலமாக இந்த நிதி ஆண்டில் கிராம அளவில் 10,000 கறவை மாடுகள் வங்கி நிதி உதவியுடன் பால் உற்பத்தியாளர்களுக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

## 3. பால் உற்பத்தியாளர்களுக்கு 31 கோடி ரூபாய் உபரி வருவாய் வழங்குதல்

**மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் அம்மா** அவர்களின் சீரிய தலைமையின் கீழ் பால் கூட்டுறவு ஒன்றியங்கள் உபரி வருவாய் ஈட்டும் நிலையை எய்தியுள்ளன. பால் உற்பத்தியாளர்களை ஊக்கப்படுத்தும் வகையில் உபரி வருவாய் அவர்கள் சங்கத்திற்கு ஊற்றிய பாலின் அளவிற்கேற்ப கூடுதல் விலையாக சுமார் 31 கோடி ரூபாய், 4 ஒன்றியங்களைச் சார்ந்த பால் உற்பத்தியாளர்களுக்கு **மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா** அவர்கள் ஆணையின்படி வழங்கப்படும்.

## 4. பால் உற்பத்தியாளர்கள் பயன் பெறும் வகையில் சங்கங்களுக்கு பால்பரிசோதனைக் கருவிகள் வழங்குதல்

தொடக்க பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கங்களில், உறுப்பினர்கள் வழங்கும் பாலிற்கான கொள்முதல் விலை, அதிலுள்ள கொழுப்பு மற்றும் இதர சத்துக்களின் அடிப்படையில் நிர்ணயிக்கப்படுகிறது. அதனைத் துல்லியமாக அளவிட்டு பாலின் தரத்திற்கேற்ற விலை வழங்கும் பொருட்டு 37 இலட்சம் ரூபாய் செலவில் 101 பால் பரிசோதனைக் கருவிகள் 100 சதவிகித மானியத்தில் சங்கங்களுக்கு வழங்க **மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள்** ஆணையிட் டுள்ளார்கள்.

மேலும் இவ்வாண்டில் இக்கருவிகள், தொடக்க பால் கூட்டுறவு சங்கங்களின் தேவைக் கேற்ப சங்கங்கள் மற்றும் ஒன்றியங்களின் கூடுதல் வருவாயிலிருந்தும் வாங்கி வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

## 5. ஈரோடு கால்நடைத் தீவனத் தொழிற்சாலையின் உற்பத்தியை உயர்த்துதல்

பால் ஊற்றும் கூட்டுறவு சங்க உறுப்பினர்களுக்குச் சொந்தமான கறவை மாடுகளின் வளர்ச்சி மற்றும் பால் உற்பத்தித் திறனை அதிகரிக்க சரிவிகித கால்நடைத் தீவனம் இன்றியமையாதது என்பதாலும், பெருகிவரும் கால்நடைத் தீவனத்தின் தேவையை பூர்த்தி செய்யும் வகையிலும் ஈரோடு கால்நடைத் தீவன தொழிற்சாலையின் உற்பத்தியை மாதம் ஒன்றிற்கு தற்போதுள்ள 2,000 மெட்ரிக் டன் என்ற அளவிலிருந்து 3,000 மெட்ரிக் டன் என்ற அளவிற்கு உயர்த்த **மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள்** ஆணையின்படி நடவடிக்கை எடுக்கப்படும்.

## 6. கிராம அளவில் புதிய மொத்த பால் குளிர்விப்பான்கள் நிறுவுதல்.

பாலின் ஆரம்ப தரத்தை பாதுகாக்கவும், பால் உற்பத்தியாளர்கள் எந்த நேரத்திலும் கறந்த பாலை சங்கங்களுக்கு வழங்க ஏதுவாகவும் **மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள்** ஆணையின்படி இந்த ஆண்டில் 7 மொத்த பால் குளிர்விப்பான்கள் 1.7 கோடி ரூபாய் செலவில் நிறுவப்படும். இதன் வாயிலாக கிராமப்புற பால் குளிரூட்டும் உள்கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்படும்.

## 7. கோயம்புத்தூர் ஒன்றிய பால் பண்ணையை நவீனப்படுத்துதல்

கோயம்புத்தூர் பால் உற்பத்தியாளர்கள் மற்றும் பால் நுகர்வோர்களுக்கு, பால் பண்ணை வழங்கி வரும் சேவையை மேம்படுத்த, பால் குளிரூட்டும் திறன், பால் பதப்படுத்தும் திறன், பால் உபபொருட்கள் தயாரிக்கும் திறன் ஆகியவை அதிகரிக்கப்படும். இதற்காக நடப்பு நிதி ஆண்டில் **மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள்** ஆணையின்படி 29 கோடி ரூபாய் செலவில் பணிகள் துவக்கப்படும்.

## 8. சேலம் பால் பண்ணை விரிவாக்குதல்

சேலம் பால் பண்ணையின் பால் பதப்படுத்தும் மற்றும் கையாளும் திறன் தற்போது நாளொன்றிற்கு 3 இலட்சம் லிட்டர் ஆக உள்ளது. அதை 5 இலட்சம் லிட்டராக உயர்த்திட **மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா** அவர்களின் ஆணையின்படி விரிவாக்கப்பணிகள் 3 கோடி ரூபாய் செலவில் மேற்கொள்ளப்படும்.

## 9. தஞ்சாவூர் மற்றும் காஞ்சிபுரம்–திருவள்ளூர் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்களில் புனரமைப்பு பணிகள்

தஞ்சாவூர் மற்றும் காஞ்சிபுரம்–திருவள்ளூர் மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்களில் பால் உற்பத்தி மற்றும் விற்பனையை அதிகரிக்க புனரமைப்பு பணிகள் மேற்கொள்ள வேண்டியது அவசியமாகிறது. அதற்காக **மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா** அவர்களின் ஆணையின்படி, நடப்பாண்டில் 'கூட்டுறவுகளுக்கு உதவுதல்' என்ற திட்டத்தின் கீழ் தஞ்சாவூர் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர் ஒன்றியத்தில் 7 கோடி ரூபாய் மதிப்பீட்டிலும், காஞ்சிபுரம்–திருவள்ளூர் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர் ஒன்றியத்தில் **3** கோடியே **88** இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும் புனரமைப்பு பணிகள் மேற்கொள்ளப்படும்.

## 10. தொடக்க பால் கூட்டுறவு சங்கங்களில் பணியாற்றும் மாற்றுத் திறனாளிகளுக்கு போக்குவரத்துப்படி வழங்குதல்.

**மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா** அவர்களின் ஆணையின்படி தொடக்க பால் கூட்டுறவு சங்கங்களில் பணியாற்றும் மாற்றுத் திறனாளிகளுக்கு ஏற்படும் கூடுதல் போக்குவரத்து செலவினை சங்கங்களே ஏற்கும் வகையில் மாதம்தோறும் **300** ரூபாய் போக்குவரத்துப்படியாக சங்கத்தின் நிதியிலிருந்து வழங்கப்படும்.

## 11. தொடக்க பால் கூட்டுறவு சங்க பணியாளர்களுக்கு உற்பத்தியுடன் இணைந்த ஊக்கத் தொகை மற்றும் சம்பள உயர்வு வழங்குதல்

தொடக்க பால் கூட்டுறவு சங்கங்களில் பணியாற்றும் சுமார் 20,000 பணியாளர்களில் 74 சதவிகிதத்திற்கும் மேலான பணியாளர்கள் ஒட்டு மொத்த சம்பளம் மற்றும் தினக் கூலி அடிப்படையில் பணிபுரிந்து வருகிறார்கள். அவர்களை ஊக்கப்படுத்தும் விதமாக உற்பத்தியுடன் இணைந்த ஊக்கத் தொகை மற்றும் சம்பள உயர்வாக சங்கங்களின் நிதிநிலைக்கேற்ப மாதம் ஒன்றுக்கு ரூபாய் 200/– முதல் ரூபாய் 300/–வரை, **மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா** அவர்களின் ஆணைப்படி, வழங்கப்படும்.

## 12. சென்னையில் நுகர்வோர்களின் தேவைக்கு புதிய வகை பால் உபபொருட்கள் அறிமுகம் மற்றும் புதிய பாலகங்கள் அமைத்தல்

**மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா** அவர்களின் ஆணையின்படி, சென்னை பெருநகர நுகர்வோர்களின் தேவைக்காக பால் உபபொருட்கள் உற்பத்தியை அதிகரிப்பதுடன், பால் கேக், சிரிகந்த் (Shrikhand) ஆகிய புதிய பால் உபபொருட்கள் அறிமுகப்படுத்தப்படும். மேலும் விரிவாக்கப்பட்ட பகுதிகள் மற்றும் பொதுமக்கள் பெருமளவில் கூடும் பகுதிகளில் பால் மற்றும் பால் பொருட்கள் பொதுமக்களுக்கு கிடைப்பதை உறுதிசெய்ய நடப்பு நிதி ஆண்டில் 43 புதிய பாலகங்கள் திறக்கப்படும்.

## 13. சென்னை பெருநகர நுகர்வோர்களுக்கு 'ஸ்மார்ட் கார்டு'(Smart Card) வழங்குதல்

சென்னை மாநகரில் கடந்த 20 ஆண்டுகளுக்கும் மேலாக பால் அட்டை மூலம் நுகர்வோருக்கு பால் வழங்கும் முறையை ஆவின் நிறுவனம் செயல்படுத்தி வருகிறது. நுகர்வோருக்கு தரமான சேவையை அளிக்க **மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா** அவர்கள் சிறப்பு முயற்சிகள் மேற்கொள்ள ஆணையிட்டுள்ளதின்படி ஆவின் நிறுவனம், ஆவின் நுகர்வோருக்காக 'ஸ்மார்ட் கார்டு' திட்டத்தை சோதனை அடிப்படையில் அறிமுகப்படுத்தவுள்ளது.

## 14. தொடக்க பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்க பணியாளர்களுக்கு மாவட்ட ஒன்றியங்களில் பணி நியமனம் பெற வாய்ப்பு அளித்தல்.

தொடக்க பால் கூட்டுறவு சங்கங்களில் பணிபுரியும் பணியாளர்கள், பால் கொள்முதல் செய்யும் பணியில் பெற்றுள்ள அனுபவங்கள், மாவட்ட ஒன்றியங்களின் பணிக்கு பயன்படுத்தப்படும். இதனால், பால் கூட்டுறவு அமைப்புகளின் மூன்றடுக்கு முறைகளுக்கு இடையில் பணியாளர்கள் அளவில் ஒருங்கிணைப்பு ஏற்படவும், அந்நிறுவனங்கள் மீது பற்றுதல் ஏற்படவும் ஏதுவாகும். இதற்காக மாவட்ட ஒன்றியங்களில் ஏற்படும் காலிப் பணியிடங்களில் ஒரு குறிப்பிட்ட சதவிகித பணியிடங்களை, பால் கூட்டுறவு சங்க பணியாளர் களுக்கென ஒதுக்கீடு செய்ய ஒன்றிய துணை விதிகளில் உரிய வழிவகை ஏற்படுத்த **மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா** அவர்களின் வழிகாட்டுதலின் படி நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

## 15. கருணை அடிப்படையிலான பணி நியமனம் செய்தல்.

கடந்த சில ஆண்டுகளாக நிலுவையிலிருந்த கருணை அடிப்படையிலான பணிக்கான விண்ணப்பங்களை, அவர்களின் குடும்ப சூழ்நிலைகளை கருத்திற்கொண்டு விரைந்து பரிசீலனை செய்து கருணை அடிப்படையிலான **பணி நியமனங்களை மேற்கொள்ள மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா** அவர்கள் உத்திரவிட்டுள்ளார்கள். அதன்படி பணியின்போது இறந்த பணியாளர்களின் வாரிசுதாரர்கள் சுமார் **60** நபர்களுக்கு கருணை அடிப்படையிலான பணி நியமனங்கள் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

## 16. இணையம் மற்றும் மாவட்ட ஒன்றியங்களின் காலி பணியிடங்களை நிரப்புதல்.

கடந்த சில ஆண்டுகளாக இணையம் மற்றும் மாவட்ட ஒன்றியங்களில் பல்வேறு தொழில்நுட்ப பிரிவுகளில் ஏற்பட்ட தொழில்நுட்ப காலி பணியிடங்கள் நிரப்பப்படாமல் இருந்த நிலையை மாற்றி, தகுதியின் அடிப்படையில் பணியாளர்களுக்கு பதவி உயர்வு வழங்குவது அவசியமாகிறது. பணித்திறனை மேம்படுத்த இத் தொழில்நுட்ப காலி பணியிடங்களை நிரப்ப **மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா** அவர்களின் ஆணைப்படி சுமார் 430 காலி பணியிடங்களை நிரப்ப நடவடிக்கை எடுக்கப்படும்.

©
தமிழ்நாடு அரசு
2012